## உச்சநீதிமன்றமே கண்டித்துள்ளது!

# பழிவாங்கும் நோக்கத்துடனேயே அமலாக்கத் துறை செயல்படுகிறது!

## கழக சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி!

**சென்னை, மே 24-**

**பழிவாங்கும் நோக்கத்துடன் அரசியல் ரீதியான காழ்ப்புணர்ச்சியோடு, அமலாக்கத்துறை செயல்படுகிறது என்பதை உச்சநீதிமன்றமே இப்போது கண்டித்துள்ளது என்று தி.மு.க. சட்டத் துறைச் செயலாளரும் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினருமான என்.ஆர். இளங்கோ நேற்று அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.**



அவரது பேட்டி வருமாறு:-

முறையற்ற முறையில் உயர் அதிகாரிகளின் வீட்டில் சோதனை செய்வது, தமிழ்நாடு அரசு அலுவலகங்களில் சோதனை செய்வது உள்ளிட்ட முறையீடுகளை உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசின் மனு மூலம் தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு வந்தது. வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி அவர்கள், அமலாக்கத் துறை தன்னுடைய வரம்பை மீறி செயல்பட்டுக்கொண்டிருக்கிறது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்துள்ளார்.

தமிழ்நாடு அரசாங்கம் சார்பில், இதுபோன்ற செயல்கள் மாநில சுயாட்சிக்கு எதிரானவை என்பதைக் குறிப்பிட்டு ஒரு மனுவை தாக்கல் செய்திருந்தோம். அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கைகள் எல்லாம் கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என்பதையும் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டி அமலாக்க துறையின் நடவடிக்கைக்குத் தடை விதித்துள்ளது. தடை விதித்தது மட்டும் அல்லாமல், அமலாக்கத் துறை தன்னுடைய வரம்புகளை மீறி செயல்படுகிறது என்பது இரண்டாவது முறையாகவும் அழுத்தமாகப் பதிவு செய்துள்ளது.

**அரசியல் காழ்ப்புணர்ச்சி!**

எனவே தமிழ்நாடு அரசாங்கம் இத்தனை நாள் சொல்லி வந்த, அமலாக்கத் துறையின் செயல்பாடுகள் மாநில சுயாட்சிக்கு எதிரானவை; அரசியல் காழ்ப்புணர்ச்சி கொண்டவை என்பதை உச்சநீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அமலாக்க துறையின் நடவடிக்கைகளுக்குத் தடை விதித்துள்ளது.

எங்களின் வாதத்தின் போது, 2014-ஆம் ஆண்டு முதல் இப்போது வரை டாஸ்மாக் ஊழியர்கள் மீது கணக்கில் வராத பணம் தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை வழக்குப் பதிவு செய்வார்கள். அதன் பிறகு அந்தப் பணத்திற்கு கணக்கு கொடுத்தால் அந்த வழக்கு முடித்து வைக்கப்படும். அதற்கு தகுந்த முகாந்திரம் சொல்லாவிட்டால் லஞ்ச ஒழிப்புதுறை மேல் நடவடிக்கையை எடுக்கும். அப்படி பார்க்கும்போது, பதியப்பட்ட 47 வழக்குகளில் பெரும்பாலான வழக்குகளில் சம்பந்தப்பட்ட ஊழியர்கள் உரிய விளக்கத்தை கொடுத்த பிறகு வழக்குகள் முடித்து வைக்கப்பட்டுள்ளன. சில வழக்குகளில் விடுதலையும் கிடைத்துள்ளது. இந்த வழக்குகளை முகாந்திரமாக வைத்துக்கொண்டு அமலாக்கத் துறை டாஸ்மாக் நிறுவனத்திற்கு உள்ளேயே சென்று ரெய்டு நடத்துவது முறையற்றது.

அமலாக்கத் துறை ஒரு வழக்கை எடுத்து விசாரிக்க வேண்டும் என்றால், அதற்கான மூல வழக்கில் சம்பந்தப்பட்டவர்களை மட்டும்தான் விசாரிக்க முடியும். 50 ஆயிரம் , 1 லட்சம் என கணக்கில் வராத பணம் வைத்திருந்தார்கள் என்ற வகையில் போடப்பட்ட மூல வழக்கை வைத்துக் கொண்டு அமலாக்கதுறை டாஸ்மாக் நிறுவனத்தின் தலைமை அலுவலகத்திற்கு சென்று, அரசியல் காழ்ப்புணர்சி காரணமாக ரெய்டு நடத்தி 1,000 கோடி ரூபாய் அளவிற்கு ஊழல் நடந்திருப்பதாக அரசியல்வாதிகள் போல அமலாக்கத் துறை அறிக்கை விடுவது சட்டத்திற்குப் புறம்பானது.

அதைத்தான் தமிழ்நாடு அரசாங்கமும் , தி.மு.க.வும் சொல்லிக்கொண்டே வந்தோம். அதை உச்சநீதிமன்றமும் இன்று ஏற்றுக் கொண்டு தடை விதித்துள்ளது.

அமலாக்கத் துறை அனைத்து வகையான வரம்புகளையும் மீறியுள்ளார்கள் என உச்சநீதிமன்றம் கூறியுள்ளது. நடைமுறைச் சட்டம் , அரசியல் அமைப்பு சட்டம், மாநில சுயாட்சி போன்ற அரசியல் அமைப்பின் அடிப்படை தத்துவத்தையும் மீறி செயல்பட்டுள்ளார்கள். அரசியல் காழ்ப்புணர்ச்சிகளுக்காக அமலாக்கத் துறை சட்டங்களை எல்லாம் துஷ்பிரயோகம் செய்துள்ளார்கள். இந்தக் காரணங்களால்தான் உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறை எல்லை மீறி செல்வதாகக் கூறியுள்ளது.

அமலாக்கத் துறையின் இந்த நடவடிக்கை ஏதோ ஒரு வழக்கை முகாந்திரமாகக் கொண்டு நடந்தது அல்ல. 2014-ஆம் ஆண்டு முதல் அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் போடப்பட்ட 39 வழக்குகளையும், தி.மு.க. ஆட்சிக்கு வந்த பிறகு போடப்பட்ட 7 வழக்குகளையும் சேர்த்து அனைத்து வழக்குகளையும் ஒன்றாகச் சேர்த்து முதன்மை வழக்காக எடுத்துகொண்டுள்ளார்கள். இதில் அந்தந்த ஊழியர்களைப்பற்றிவிசாரிக்காமல், டாஸ்மாக்கின் தலைமை அலுவலகத்தில் ரெய்டு நடத்தியதுதான் மாநில சுயாட்சிக்கு எதிரானது என கூறுகிறோம்.

**சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகள்!**

அமலாக்கத் துறை நடவடிக்கை தொடர்பாக உச்சநீதிமன்றம் கொடுத்துள்ள இந்தத் தீர்ப்பு, இந்தியா முழுமைக்குமான ஒரு தீர்ப்பாகத்தான் நாங்கள் பார்க்கிறோம். முதன் முறையாக உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறையைப் பார்த்து, மாநில சுயாட்சிக்கு எதிராக நீங்கள் நடக்கிறீர்கள் என கூறியுள்ளது. பா.ஜ.க. அல்லாமல், எதிர்க்கட்சிகள் ஆட்சி செய்யும் அனைத்து மாநிலங்களுக்கும் இந்தத் தீர்ப்பு பொருந்தும்.

2026-ஆம் ஆண்டு நடைபெற உள்ள தேர்தலை ஒட்டி நடைபெறுவதுதான் இந்தச் சோதனைகள் என்பதை நாங்கள் சொல்லாமலே மக்கள் அறிவார்கள். உச்சநீதிமன்றம் இதை உன்னிப்பாகக் கவனித்து , அரசியல் ரீதியாக அமலாக்கத் துறை செயல்படுகிறது என்பதை உச்சநீதிமன்றமே இப்போது கூறியுள்ளது.

The Prevention of Money Laundering Act (PMLA)இன்படி, சட்டத்தைத் தவறாகப் பயன்படுத்தும் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்க அதே சட்டத்தில் இடம் உள்ளது. அதைப் பயன்படுத்து உரிய நேரத்தில் உரிய நடவடிக்கையைத் தி.மு.க. எடுக்கும். மேற்கு வங்கம், டெல்லி என எதிர்கட்சிகள் ஆட்சி செய்யும் மாநிலங்களில் அமலாக்கத் துறை, வருமானவரித் துறை போன்ற அமைப்புகளை அரசியல் பழிவாங்கலுக்கு மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் ஆளுங்கட்சி நபர்கள் மீது ரெய்டு நடக்காமல், எதிர்கட்சிகள் மீது ரெய்டு நடத்தி, அவர்களை பா.ஜ.க.வில் இணைந்த பிறகு புனிதர்கள் ஆக்கப்பட்டு, அமலாக்கத் துறையின் நடவடிக்கை கைவிடப்படுகிறது.

இவ்வாறு என்.ஆர். இளங்கோ எம்.பி. பேட்டியளித்தார்.



ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டத்தின் கழக மூத்த முன்னோடியும், தி.மு.க. சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினருமான டி.எஸ்.கல்யாணசுந்தரம் அவர்களின் 100வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னையில் உள்ள அவரது இல்லத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் நேரில் சந்தித்து வாழ்த்துக் கூறினார்.

## களங்கம் கற்பிக்கும் நோக்கத்தில் நடைபெற்ற

# அமலாக்கத்துறை விசாரணைக்கு உச்சநீதிமன்றம் சம்மட்டி அடி!

## கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி பேட்டி!

**சென்னை, மே 24-**

**தி.மு.க. அரசாங்கத்திற்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்கொள்ளப்பட்ட அமலாக்கத்துறை விசாரணைக்கு உச்சநீதிமன்றத் தடை மூலம் சம்மட்டி அடி கொடுக்கப்பட்டுள்ளது என்று கழக அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ்.பாரதி அவர்கள் சென்னை அண்ணா அறிவாலயத்தில் செய்தியாளர்களைச் சந்தித்து பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.**



அவரது பேட்டி வருமாறு:-

என்போர்ஸ்மென்ட் டைரக்டெட் என்று சொல்லப்படுகிற அமலாக்கத்துறை என்பது மோடி ஆட்சிக்கு வந்த பிறகு பா.ஜ.க. அல்லாத ஆட்சி நடைபெறுகின்ற மாநிலத்திலே யார் யார் ஆட்சியில் இருக்கிறார்களோ, அவர்கள் மீதெல்லாம் வழக்கு போட வேண்டும் என்ற நோக்கத்தோடு தொடர்ந்து செயல்பட்டுவருகிறது என்பது எல்லோருக்கும் தெரிந்த ஒன்று.

தமிழ்நாட்டிலே தளபதி மு.க. ஸ்டாலினுடைய தலைமையில் நடைபெற்றுக் கொண்டிருக்கிற ஆட்சி 2021லிருந்து தொடர்ந்து மக்கள் மத்தியிலே செல்வாக்கோடும் இருக்கிறது. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமும் செல்வாக்கு உயர்ந்து கொண்டிருக்கின்றது.

அதனால்தான் 2021க்குப் பிறகு நடைபெற்ற அனைத்து தேர்தல்களிலும் திராவிட முன்னேற்ற கழகத்தினுடைய கூட்டணி மகத்தான வெற்றியை பெற்று வருகின்றது.

இதனைக் கண்டு தாங்கி கொள்ள முடியாமல் எப்படியாவது இந்த அரசுக்குக் களங்கம் கற்பிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இன்னும் தேர்தலுக்கு ஏழு மாதமே இருக்கிற வேளையில் அமலாக்கத் துறையின் மூலமாக முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

தமிர்நாட்டிலேயே தொடர்ந்து பல காலமாக டாஸ்மாக் பற்றி பல வழக்குகள் நிலுவையிலே இருந்துவருவதை மறைத்துவிட்டு, திமுகவின் மீது பழிசுமத்துகிற வகையில் அமலாக்கத்துறை மூலம் பத்திரிகையிலே செய்தி வெளியிடுவதும், பா.ஜ.க. வினுடைய தலைவர்கள் வாய்க்கு வந்தபடி பேசுவதும் தொடர்ந்து வாடிக்கையாக இருந்து வருகிறது.

**பிளாக் மெயிலிங் ஆர்கனைசேஷன்**

அதற்கெல்லாம் ஒரு சம்மட்டி அடி கொடுப்பதைப் போல இன்றைக்கு உச்சநீதிமன்றம் அமலாக்கத் துறை விசாரணைக்குத் தடை விதித்துள்ளது. இது தமிழ்நாட்டு மக்களுடைய உணர்வுகளை மதிப்பதோடு மட்டுமல்ல, அமலாக்கத்துறையின் அக்கபோர்களுக்கு முடிவும் கட்டி இருக்கிறது. ஆகவே, இந்தத் தீர்ப்பை திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கின்றது.

அமலாக்கத்துறையின் விசாரணைக்கு நீதிமன்றமே தடை கொடுத்த பிறகு, அதுவும் உச்சநீதிமன்றமே தடை கொடுத்துவிட்ட பிறகு, வேறு ஒன்றும் தேவையில்லை. கடுமையான கண்டனம் கூட தெரிவித்திருப்பதாக சொல்கிறார்கள். ஆகவே இதன் பிறகாவது, ஒன்றிய அரசு அமலாக்கத் துறையைத் தவறாகப் பயன்படுத்துவதை விட்டுவிட வேண்டும்.

அமலாக்கத் துறை எப்படிப்பட்ட நிறுவனம் என்றால், கேரளாவில் இரண்டு கோடி ரூபாய் அமலாக்கத் துறை அதிகாரி இலஞ்சம் பெற்ற போது பிடிபட்டார். அதனால், அந்த மாநிலத்தில் அமலாக்கத் துறை அதிகாரிகளின் நடவடிக்கைகள் அனைத்தும் விசாரிக்கப்பட இருக்கின்றன.

தமிழ்நாட்டிலேயே ஒரு டாக்டரிடத்தில் திண்டுக்கல்லிலே இலஞ்சம் கேட்டு, அமலாக்கத் துறை அதிகாரிகள் கையும் களவுமாக பிடிப்பட்டனர். ஆகவே, அமலாக்கத்துறை என்பது பிளாக்மெய்லிங் ஆர்கனைசேஷன் மாதிரி இந்தியா முழுவதும் செயல்படுவதைத்தான் உச்சநீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவ்வாறு ஆர்.எஸ். பாரதி பேட்டியளித்தார்.

## தொழில் வளர்ச்சியில் 'சிப்காட்' நிறுவனம் 3,390 தொழில் நிறுவனங்கள் மூலம்

# ரூ.1.99 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்து 8.79 இலட்சம் வேலைவாய்ப்புகள்!

## 'சிப்காட்' மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ் தகவல்!

சென்னை,மே.24-

சென்னை, திருப்பெரும்புதூர் புத்தாக்க மையத்தில் (FORT) நேற்று முன்தினம் (22.05.2025) சிப்காட் நிறுவனம் அதன் திறன் மேம்பாட்டு நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றத்துடன் (Tamil Nadu State Council For Higher Education-TANSCHE) இணைந்து திறன் மேம்பாட்டிற்கான ஆற்றலை கண்டறியும் கூட்டம் டாக்டர் கே.செந்தில் ராஜ், மேலாண்மை இயக்குநர், சிப்காட், தலைமையில், எம்.பி. விஜயகுமார், (ஓய்வு), துணைத்தலைவர், தமிழ்நாடு மாநில உயர்கல்வி மன்றம் முன்னிலையில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில், சிப்காட் மேலாண்மை இயக்குநர் டாக்டர் கே.செந்தில் ராஜ், தலைமையுரையில் பேசுகையில்,

சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக முக்கிய பங்காற்றி வருகிறது. இது வரை 24 மாவட்டங்களில் 50 தொழிற் பூங்காக்களை 48,926.48 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கி 3,390 தொழில் நிறுவனங்களின் மூலம் 1.99 இலட்சம் கோடி முதலீடுகளை ஈர்த்து 8.79 இலட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி உள்ளது.

உயர்கல்விக்கும், தொழில் நிறுவனங்களில் திறன்மிகு வேலைகளின் ஆற்றலுக்குமான இடைவெளியை குறிப்பாக நிலை 2 மற்றும் நிலை 3 நகரங்களில் பயின்றுவரும் மாணவர்களிடத்தில் சீர்செய்வதே இந்த முன்னெடுப்பின் நோக்கமாகும். ஆர்வமுள்ள மாணவர்கள் பயிலும்போதே கண்டறியப்பட்டு தொழில் நிறுவனங்களின் உதவியுடன் Learning Management System (LMS) மூலம் குறிப்பிட்ட தொழில் சார்ந்த பயிற்சிகள் வழங்கப்படும். தொழில் நிறுவனங்களில் இருந்து வளர்ந்து வரும் பணிகளின் தன்மை, திறன்மிகு பணிக்கான ஆற்றல் பெறப்பட்டு முற்போக்கான, சுயந்தேறல் மாடுல்கள் (Self-paced Modules) மூலம் பாடதிட்டம் வடிவமைக்கப்படும். மாணவர்கள் முதலாம் ஆண்டு இறுதியில் விருப்பமான பிரிவினை தேர்ந்தெடுத்து அதில் நிலையான மதிப்பீட்டினை பெறலாம். இந்த முன்னெடுப்பின் மூலம் மாணவர்கள் இணைப்பு பயிற்சி (Internship) திறன் ஆற்றல் மற்றும் பணியிடு திறன் குழுமத்தில் (Empanelled Talent Pool) பங்குபெறும் வாய்ப்பினை பெறுவர். தொழில் நிறுவனங்கள் பணியாளர்கள் சேர்ப்பிற்கு பின் பயிற்சியில் செலவிடும் தொகையினை குறைப்பதற்கும், திறன்மிகு பணியாளர்களை ஆரம்ப நாட்களிலேயே பெருவதற்கும் ஏதுவாக அமையும். கல்வி துறையும், தொழில் துறையும் இணைந்து உருவாக்கும் திறன் மேம்பாட்டு மாதிரி (Talent Development Model) தனித்துவம் வாய்ந்தது.

இந்த முன்னெடுப்பு நடவடிக்கையின் குறிக்கோள், தொழில் நிறுவனங்களுக்கு கிடைக்கும் பயன்கள், திட்டத்தினை செயலாக்கும் முறை பற்றி தொழில் நிறுவனங்கள் மற்றும் அதன் குழுமங்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.

மேலும், காஞ்சிபுரம் மாவட்டத்திலுள்ள 5 சிப்காட் தொழிற் பூங்காக்களில் இருந்து சுமார் 100 நிறுவனங்கள் கலந்து கொண்டு திறன்மிகு தொழிலுக்கான பயிற்சியினை வடிவமைப்பதற்கு ஏதுவாக பணிகளின் தன்மை, திறன்மிகு பணிக்கான ஆற்றல் மற்றும் மதிப்பீடு குறித்து பங்கேற்பாளர்களின் கருத்துக்களை பகிர்ந்துக்கொண்டது முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது.

எனவே, தமிழ்நாடு தொழில்துறையில், இந்த முன்னெடுப்பின் மூலம் திறன்மிகு வேலைக்கான பணியாளர்களை கண்டறிவதில் இலட்சியமாக தன்னிறைவு பெறும் என பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சிப்காட் பொது மேலாளர் சந்திரமோகன், கண்காணிப்பு பொறியாளர் தேவ இரக்கம் அவர்கள், சிப்காட் அலுவலக தொழிற்நுட்ப பணியாளர்கள் மற்றும் திருப்பெரும்புதூர் புத்தாக்க மையத்தின் போர்ட் நிறுவனத்தை சார்ந்த பணியாளர்களும் கலந்து கொண்டனர்.




முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் குன்னூர் சட்டமன்றத் தொகுதியில் திறக்கப்பட உள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் ஆயத்த பணிகளை அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார், முன்னாள் மாவட்ட சிறுபான்மை அணி துணை அமைப்பாளர் ஃபாருக் உட்பட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்டத்திற்கு எதிரான

# வழக்கை அவசர அவசரமாக விசாரிக்க எந்த அவசியமும் இல்லை!

## சென்னை உயர்நீதிமன்றத்தில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் வாதம்!

**சென்னை, மே 24 -**

**துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு சார்பில் மேல்முறையீடு செய்யப்படும் என்று மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்துள்ளார். தமிழ்நாடு அரசுத் தரப்பில் பதில் அளிக்க போதிய அவகாசம் தராமல் விடுமுறைக் கால அமர்வில் அவசரகதியில் விசாரிப்பது நியாயம் அல்ல என்றும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் கூறியுள்ளார்.**



தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளிக்காமல் கிடப்பில் போட்டு வந்ததால் தமிழ்நாடு அரசு நீதிமன்றத்தை நாடியது. இந்த விவகாரத்தில் உச்சநீதிமன்றம் வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்ப்பை வழங்கியது.

அதன்படி தமிழ்நாட்டில் உள்ள அனைத்துப் பல்கலைக்கழகங்களுக்கும் துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை மாநில அரசுக்கு வழங்குவது, பல்கலைக்கழகங்களின் வேந்தராக முதலமைச்சரை நியமிப்பது உள்ளிட்ட அம்சங்கள் அடங்கிய 10 சட்ட மசோதாக்களுக்கு உச்சநீதிமன்றம் தனக்குரிய சிறப்பு அதிகாரம் மூலம் ஒப்புதல் அளித்தது.

மசோதாக்கள் குறித்து முடிவெடுக்க ஆளுநருக்கு காலக்கெடு விதித்தும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதனைத் தொடர்ந்து ஒப்புதல் வழங்கப்பட்ட மசோதாக்கள் அரசிதழில் வெளியிடப்பட்டு அமலுக்கு வந்துள்ளது.

இந்த நிலையில், துணை வேந்தர்கள் நியமனம் தொடர்பான சட்டத்திற்கு எதிராக நெல்லையைச் சேர்ந்த பா.ஜ.க. நிர்வாகி வெங்கடாசலபதி என்பவர், சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஜி.ஆர். சுவாமிநாதன், வி.லட்சுமி நாராயணன் அடங்கிய விடுமுறை கால அமர்வில் நேற்று முன்தினம் மீண்டும் விசாரணைக்கு வந்தது.

அப்போது, தமிழ்நாடு அரசு சார்பில் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் காணொலி மூலம் ஆஜராகி வாதிட்டார்.

"துணைவேந்தர்கள் நியமனம் தொடர்பான யு.ஜி.சி. விதிகளை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கு உச்சநீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. எனவே, இந்த வழக்கையும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்றக் கோரி தமிழ்நாடு அரசு சார்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சூழலில் இந்த வழக்கை அவசர, அவசரமாக விசாரிக்க எந்த அவசியமும் இல்லை" என்று மூத்த வழக்கறிஞர் வில்சன் வாதிட்டார்.

பா.ஜ.க.வைச் சேர்ந்த வழக்கறிஞரான மனுதாரர் அரசியல் உள்நோக்கத்துடன் இந்த வழக்கை தொடர்ந்துள்ளார். அரசின் சட்டங்களுக்குத் தடைக் கோரும் இந்த வழக்கில் தமிழ்நாடு அரசு தரப்பில் பதில் அளிக்க போதிய அவகாசம் தராமல் விடுமுறை கால அமர்வில் அவசரகதியில் விசாரிப்பது நியாயம் அல்ல என்றும் பி.வில்சன் குறிப்பிட்டார்.

"உச்சநீதிமன்ற உத்தரவுப்படியே தமிழ்நாடு அரசு செயல்பட்டு வருகிறது. பா.ஜ.க.வைச் சேர்ந்த மனுதாரரின் வழக்கை தள்ளிவைப்பதால் வானம் இடிந்துவிடாது. யு.ஜி.சி. விதிகளைவிட தமிழ்நாடு அரசின் சட்டங்கள் மேலானவை. எனவே இடைக்காலத் தடை கோரும் மனுவை உயர் நீதிமன்றம் விசாரித்தால், வழக்கை உச்சநீதிமன்றத்துக்கு மாற்றக் கோரிய அரசின் மனு செல்லாததாகி விடும்" என்றும் பி.வில்சன் குறிப்பிட்டார்.

பா.ஜ.க. நிர்வாகி தாக்கல் செய்துள்ள இந்த வழக்கில் முக்கிய ஆதாரங்கள் மறைக்கப்பட்டுள்ளன. எனவே, தமிழ்நாடு அரசின் சட்டங்களுக்கு தடை விதிக்க கூடாது என்றும் வழக்கில் விரிவான வாதங்களை முன்வைக்க அவகாசம் வழங்க வேண்டும் என்றும் மூத்த வழக்கறிஞர் வில்சன் கோரிக்கை விடுத்தார். இருப்பினும் துணை வேந்தர்கள் நியமனச் சட்டத்திற்கு இடைக்காலத் தடை விதித்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய மூத்த வழக்கறிஞர் பி. வில்சன், இந்த வழக்கில் நீதிபதிகள் என்ன சொன்னார்கள் என்பதைக் கூட கேட்க முடியாத படி மைக் ஆஃப் செய்யப்பட்டிருந்தது என்று கூறினார்.

துணைவேந்தர்கள் நியமனத்தில் சென்னை உயர்நீதிமன்றம் பிறப்பித்துள்ள உத்தரவை எதிர்த்து தமிழ்நாடு அரசு சார்பில் உச்சநீதிமன்றத்தில் விரைவில் மேல்முறையீடு செய்யப்படும் என்றும் மூத்த வழக்கறிஞர் பி.வில்சன் தெரிவித்தார்.